சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) – தாட்கோ செயல்திட்டம் 2011–2012 – தனிநபர் திட்டங்களுக்கான மானியத் தொகையினை உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉதி) துறை

அரசு ஆணை (நிலை) எண்.120 நாள்: 23.11.2011

திருவள்ளுவராண்டு 2042, கார்த்திகை 7

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.2116, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 03.11.1989.
2. அரசாணை (நிலை) எண்.45, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉதி–2) துறை, நாள் 22.03.1995.
3. அரசாணை (நிலை) எண்.147, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉதி) துறை, நாள் 22.09.2005.
4. அரசாணை (நிலை) எண்.15, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉதி) துறை, நாள் 23.1.2004.
5. அரசாணை (நிலை) எண்.11, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉதி–2) துறை, நாள் 04.2.2002.
6. அரசாணை (நிலை) எண்.58, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉதி–1) துறை, நாள் 28.05.2004.

படிக்க:–

7. மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்களின் கடித எண்.ஜி1/3055/2011, நாள் 20.9.2011.

––––

ஆணை:–

பார்வை ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசாணைகளில், தனிநபர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ், மானியம் முறையே ரூ.10,000/– லிருந்து ரூ.15,000/–ஆகவும். ரூ.15,000/–லிருந்து ரூ.25,000/– ஆகவும் உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2) பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், வருவாய் பெருக்கக்கூடிய தனிநபர் கடன் திட்டங்களின் கீழ், விவசாயம் மற்றும் அதனை சார்ந்த திட்டங்களுக்கு மானியம், திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.25,000/– ஆகவும், பிற தொழில்களுக்கான மானியம் திட்ட தொகையில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.25,000/– எனவும்,

இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் திட்ட மதிப்பீடு ரூ.7.50 இலட்சமாகவும், மானியம் திட்டத் தொகையில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.25,000/– எனவும் நிர்ணயம் செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

3) பார்வை நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில், நிலம் வாங்கும் திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு ரூ.1.00 இலட்சமாகவும், மானியம் திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.50,000/– என நிர்ணயம் செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. மேலும், நிலம் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திட்ட மதிப்பீடு ரூ.1.00 இலட்சமாகவும், மானியம் திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.50,000/– என நிர்ணயம் செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. இவ்வரசாணையின்படி பயனாளிக்கு அதிகபட்சமாக ரூ.1.00 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

4) பார்வை ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார கடன் திட்டத்தின் கீழ் திட்ட மதிப்பீட்டில் ரூ.7.50 இலட்சமாகவும் மானியம் திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.2,50,000/– எனவும் நிர்ணயம் செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

5) 4.8.2011 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் 2011–2012–ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

> ''தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவாறு சுயதொழில் தொடங்கும் நபர்களுக்கு வழங்கப்படும் நிதி உதவியின் அளவு உச்ச வரம்பு ஏதுமின்றி 30 விழுக்காடுகள் மானியத் தொகையுடன் 7.50 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்''

இதனைக் கருத்தில் கொண்டு, சுயதொழில் தொடங்கும் தனி நபர்களுக்கான அதிகபட்ச மானியத்தை திட்ட மதிப்பீட்டில் ரூ.7.50 இலட்சத்தில் 30 விழுக்காடு உயர்த்தி வழங்க 188–வது தாட்கோ, இயக்குநர் குழுமத்தில் பொருள் வைக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

6) மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்களின் பரிந்துரையின்பேரிலும், திட்ட செயலாக்கத்தின் நடைமுறையினை கருத்தில் கொண்டும், பயனாளிகள் குழப்பம் இல்லாமல் திட்டத்தை தெளிவாக புரிந்து கொள்ள ஏதுவாக இருப்பதற்காகவும், சிறப்பு மத்திய நிதியுதவியின் கீழ் தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து தனிநபர் பயன்பெறும் திட்டங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி திட்ட மதிப்பீட்டில் 30 விழுக்காடு அல்லது ரூ.2,25,000/– இவற்றில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கலாம் என அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஆ.சு. ஜீவரத்தினம்
அரசு செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை – 101.
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை – 5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை – 5.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை – 5.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 18.
மாநில கணக்காய்வுத் தலைவர் (துணிக்கை–1) சென்னை – 35.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை 6.
இயக்குநர், வேளாண்மைத்துறை, சென்னை 6.
இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, சென்னை 6.
இயக்குநர், சமூகநீதி மற்றும் அதிகாரமளிப்புத் துறை, புதுடெல்லி –1.

<u>நகல்</u>
இயக்குநர், தேசிய ஆதிதிராவிடர் நல ஆணையம், சென்னை – 6.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை 9.
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலரின் தனிச்செயலர்,
சென்னை – 9.
அனைத்து தாட்கோ, மாவட்ட மேலாளர்கள் (மேலாண்மை இயக்குநர், தாட்கோ வழியாக)
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை (அனைத்து பிரிவுகள்),
சென்னை – 9.
நிதித்துறை (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை),
சென்னை –9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.